**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.
**S.T.C. No. 15/2021**

| | | |
|---|---|---|
| L.W. P.W.: 1 | | |
| D.W. : | | |
| Name : | **குமார்** | Caste : |
| Father's Name : | தாயுமானவ தேவர் | Calling : |
| Village: | | Religion : |
| Taluk : | | Age : 48/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.07.2023.

(எதிர்மனுதாரர் ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கின் புகார்தாரர். எதிரிக்கெதிராக இந்த காசோலை மோசடி வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) எ.சா.ஆ.1 - 08.12.2020 அருள்மணிக்கு எதிரி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல்.
2) எ.சா.ஆ.2 - 11.12.2020 அருள்மணி பெற்றுக்கொண்ட ஒப்புதல் அட்டை - அசல்
3) எ.சா.ஆ.3 - 21.12.2020 அருள்மணி அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பு - அசல்
4) எ.சா.ஆ.4 - 03.03.2021 எதிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய நடவடிக்கை மனு - அலுவலக நகல்.
5) எ.சா.ஆ.5 - 04.03.2021 மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பெற்றுக்கொண்ட ஒப்புதல் அட்டை - அசல்.
6) எ.சா.ஆ.6. 02.08.2021 தகவல் அறியும் சட்டப்படி அனுப்பப்பட்ட மனு - அலுவலக நகல்.
7) எ.சா.ஆ.7. 05.08.2021 பொது தகவல் அலுவலர் பெற்றுக்கொண்ட ஒப்புதல் அட்டை - அசல்
8) எ.சா.ஆ.8. பொது தகவல் அலுவலர் அனுப்பிய தகவல் அறிவிப்பு - அசல்.

(எ.சா.ஆ.4 முதல் எ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் எதிரியால் வழக்கிற்காக பொய்யாக புனையப்பட்ட ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்களுக்கும் இவ்வழக்கிற்கும்

தொடர்பில்லை என்றும் கூறி மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய புகார்தாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆட்சேபனையுடன் மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.)

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் திருத்துறைப்பூண்டியில் கீர்த்தி பேப்பர்ஸ் என்ற கடை நடத்தி வருகிறேன். எனது கடை அமைந்துள்ள இடம் நகராட்சிக்கு உட்பட்டுள்ள இடம். எனது கடையில் பள்ளிக்கு தேவையான பாடபுத்தகங்கள் மற்றும் இதர பொருட்களை விற்று வருகிறேன். நான் எனது முதல் விசாரணையில் சொல்லியபடி **G.A.** ஒப்பந்த நிறுவனத்தில் கூட்டாளியாக உள்ளேன். மேற்படி நிறுவனத்தை பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் மேற்படி நிறுவனத்திற்கு GST No.உள்ளது. வழக்கு காசோலையில் **For G.A.Contractors** என்று உள்ளது. வழக்கு காசோலையில் Private Limited என்று குறிப்பிடவில்லை என்றால் சரி.

வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது. காசோலை திருப்பப்பட்ட பிறகுதான் எனக்கு புகார்தாரரால் மேற்படி காசோலை வங்கியில் செலுத்தப்பட்டது என்ற விபரத்தை தெரிந்துகொண்டேன் என்று எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். புகார்தாரர் என்னை வெட்ட வந்தார் என்று கூறியிருந்த நிலையில் அதுசம்பந்தமாக நான் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். ஆனால் தேதி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி புகார் கொடுத்ததற்காக காவல் நிலையத்தில் இருந்து மனு ரசீது கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். மேற்படி மனு ரசீதை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

எனது முதல் விசாரணையில் அருள்மணி என்பவருக்கு வழக்கு காசோலையை டீசல் போடுவதற்காக கொடுத்ததாக சொல்லியுள்ளேன். அருள்மணி மற்றும் புகார்தாரர் நான் அருள்மணி என்பவருக்கு கொடுத்த காசோலையை புகார்தாரர் மூலம் மோசடியாக வங்கியில் செலுத்தி மோசடியாக இவ்வழக்கை தாக்கல் செய்ததற்காக மேற்படி அருள்மணி மற்றும் புகார்தாரர் மீது இந்நீதிமன்றத்தில் தனிநபர் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது கு.வி.மு.ச. பிரிவு 313 கேள்விக்கு இவ்வழக்கு காசோலையானது அருள்மணி என்பவருக்கு கொடுக்கப்பட்டது என்று கூறியுள்ளேனா என்றால் இல்லை.

நான் மேற்படி அருள்மணி என்பவரும் இவ்வழக்கிற்காக 4 முதல் 8 ஆவணங்களை போலியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் அருள்மணி மீது நீதிமன்றத்தில் தனிநபர் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அருள்மணிக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பும்

அனுப்பியுள்ளேன். மேற்படி நிறுவனத்தை பதிவு செய்துள்ளோனா என்றால் இல்லை. ஆனால் மேற்படி நிறுவனத்திற்கு GST No.உள்ளது.

நான் புகார்தாரரிடம் இருந்து பெற்ற கடனுக்காகத்தான் இவ்வழக்கு காசோலையை கொடுத்துள்ளேன் என்றும், தற்போது பொய்யாக அருள்மணிக்கு இவ்வழக்கு காசோலையை கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, is my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.

DM-cum-JM,
Vedaranyam.